[9th March 1966

குறுக்குக் கிராதி போன்ற கைப்பிடிச் சுவர்கள் இயற்கை எழிலைக் குறைத்து விடுகின்றன என்று சில கலை நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கண்ணோட்டத்தோடு இதைப் பரிசீலனை செய்து எடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த அமைப்புகளெல்லாம் அங்கு இருப்பதற்குக் காரணம், போக்குவரத்திலே எந்தவித மான விபத்தும் வந்து விடக்கூடாதே என்பதற்காகத்தான். ஆனால், கனம் அங்கத்தினர் விரும்புவதைப் போல, பார்க்க நல்ல தோற்றத்தோடு இருக்கும் முறையில் ஏதேனும் புது முயற்சிகள் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் நமது அரசாங்கம் கார்ப்பரேஷன் கமிஷனருக்கும் மற்றவர்களுக்கும் எழுதி, இதற்கு வேறு வழி கண்டுபிடிக்க முடியுமா என்பது பரிசீலனையில் இருக்கிறது.

Laying of road on Palani hill

* 219 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to lay a motorable road to Palani Andavar Hill Temple at the top of the hill; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) There is no such proposal under the consideration of the Government.

திரு. வை. சங்கரன் : அம்மாதிரி பாதை அமைப்பதிலே ஏதாவது கஷ்டம் இருக்கிறதா? வேறு ஏதாவது காரணத்தை யொட்டி அம்மாதிரி உத்தேசம் இல்லையோ?

கனம் திரு. வெ. ராமையா : கஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால், அதுபோன்ற யோசனை இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : மின்விசையால் இழுக்கப்படும் 'விஞ்ச்' என்னும் வாகனத்தில் போகிறவர்களையும், சாலை அமைத்து மோட்டாரில் போகிறவர்களையும், பக்தர்கள் என்று முருகன் ஏற்றுக்கொள்ளமாட்டார், நடந்து செல்கிறவர்களைத்தான் உண்மையான பக்தர்கள் என்று முருகன் ஏற்றுக்கொள்ளுவார் என்று சிலர் சொல்லுகிறார்கள். படியேறி நடந்து செல்கிறவர் களைத்தான் பக்தன் என்று முருகன் ஏற்றுக்கொள்வாரும். அது மட்டுமல்ல. விஞ்ஞான வளர்ச்சியிலே ஸாட்டிலைட் மூலம் சந்திர பகவானைத் தொடுவதுகூட சரியல்ல, ஆஸ்திக வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுகிறது என்று இராஜாஜி போன்றவர்கள் கருது கிறார்களே, அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர், பக்தர்களைப் பற்றி இவ்வளவு ஆராய்ச்சி செய்வதைக் குறித்து சந்தோஷம். அடிவாரத்திலிருந்து மலைக்குப் போகிறவர்கள் நடந்தும் போக லாம், சமீபத்தில் அமைக்கப்பட்ட எலெக்ட்ரிக் விஞ்சிலும் போகலாம்.

9th March 1966]

திரு. து. ப. அழகமுத்து : *தற்போது பழனி மலைக்குப் போவதற்கு போடப்பட்டுள்ள மின்சார விஞ்ச்சில் ஏறுமிடத்தில் "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பதிழுக்கு" எனப் போர்டு போடப்பட்டுள்ளதே, அதற்குப் பொருள் என்ன என்று சொல்வார்களா?* 9–00 a.m.

கனம் திரு. வெ. ராமையா : *நான் இந்த போர்டைப் பார்க்கவில்லை. தேவஸ்தான அதிகாரிகளுக்கு எழுதினால் அவர்கள் அதன் பொருளை விளக்குவார்கள்.*

திரு. து. ப. அழகமுத்து : *அந்த இடத்தில் போர்டு போடப்பட்டுள்ளதன் பொருள் என்ன என்றுதான் கேட்டேன் (சிரிப்பு).*

(பதில் இல்லை.)

Seshasayee Paper Mills

* 220 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether there is any proposal before the Government to supply goods from the Forest Department to Seshasayee Paper concerns ; and

(*b*) if so, the details thereof ?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) & (*b*) The Government have already been supplying bamboos from the Reserved Forests to the Paper Mills set up by Seshasayee Paper and Boards, Limited, at Pallipalayam, Salem district. The period of the agreement is six years from 11th April 1962. There is no proposal to supply other goods to the mills pending with Government.

திரு. செ. மாதவன் : *கனம் தலைவர் அவர்களே, ஆறு ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ½ லட்சம் டன் மூங்கில் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு ஏராள நஷ்டம் வருவதாக அக்கவுண்டென்ட் ஜெனரல் குறிப்பிட்டிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?*

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : *இதில் ஒன்றும் குறைபாடு இல்லை. ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கு அதிகம் போகாமல், 25 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கு கிழே போகாமல் கொடுக்கவேண்டும் என்பது அக்ரிமெண்டு. அந்த வகையில் விற்பனையாவதில் நமக்கு அதிகத்தொகை வந்து கொண்டிருக்கிறது.*

திரு. செ. மாதவன் : *அந்த ஒப்பந்த ஷரத்துக்களில் உள்ள குறைபாடு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? 1963-64 இல் மட்டும் 1½ லட்சம் நஷ்டம் ஏற்பட்டிருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?*